**SIR M. CT. MUTHIAH CHETTIAR HIGHER SECONDARY SCHOOL**

23, Raja Annamalai Road, Purasawalkam, Chennai-600 084. Tel: 26411625, Fax: 26433845 Email: mctmitpark@vsnl.net

# CIRCULAR TO THE PARENTS

Dear Parents,

We would like to draw your attention to the following important points and changes that are being to be implemented with immediate effect to tone up the discipline and to bring perfect orderliness in the school. We request you to ponder these points and adhere to the changes failing which we are constrained to initiate appropriate remedial measures against your / daughter / ward.

1. **School Uniform:**

Our school uniform is changed. All the students should come in the 'New school uniform' on the reopening day of the ensuing academic year 2011-2012. Samples of the 'New School Uniform' will be sent to the parents through students during Annual examination 2011.

The code No. of the New uniform: Pant: STC 23, Shirt: D 39490

All the parents are asked to co-operate with us. New uniform is readily available at 'Madharsha & Sons', Purasaiwalkam, by 1st week of May 2011.

2. **Start Early: Reach Safely. Punctuality is to be maintained:**

Maintaining punctuality is one of the best qualities. Students should come to the school regularly well in advance. They are expected to be present in the school by 8.15 A.M. Parents co-operation is requested in this regard. **It is the prime responsibility of the parents to see that their children attend the school without delay. Hence, they should prepare and send children in such a way that they reach the school on time without any excuses.**

More over **parents should advise their children to come to the school directly from home in the morning and return to home in the evening without loitering anywhere.**

3. **Students are not permitted to leave the school without proper permission.**

Students should attend the school for full session only. (Morning and afternoon sessions). **Half-a day leave is not permitted.**

Incase of any emergency, only the parent (Mother or Father) should come to school **in person** and take the student, with the permission of the HM, being accompany by a written request.

Any student seen outside the campus, during the school hours, without getting permission will be expelled immediately.

4. **Academic Follow-ups and Interaction:**

Parents are very much aware that tests (3 mid-term tests) and Examinations (Quarterly and Halfy-Yearly examinations) are being conducted periodically as per the government time-table. Evaluated answer-scripts of your children are usually given to them within a week time after the examinations. Hence, parents are requested to be vigilant and monitor the academic performance of their wards. They are free to interact with that teacher concerned and the Headmaster regarding the academic improvemnt of their wards.

Whenever parents' meetings are being organized and intimation regarding such meetings reaches the parents, they should attend the meetings without fail. It is to be noted that such meetings are being conducted only for the benefit of their wards.

5. **Dress Code and personal appearance norms are to be followed strictly.**

Students should come to the school in proper uniform only. Even the children who celebrate their birthday should follow this. **Students without proper uniform will not be allowed to attend the classes.**

Students are expected to maintain a high standard of tidiness in their dress and appearance.

- Hair is to be cut short and neatly combed

- ¤ Nails are to be cut short
- ¤ Shoes and footwear are to be worn properly

6. **School is a Tobacco-Free Zone**

Intake and use of tobacco in any form such as smoking, pan etc. is **very injurious to health.** And so, students are advised against this unhealthy habit. Any student found indulging in such practice would be dealt with seriously.

7. **Cell Phone is totally banned inside the school campus.**

Possession of cell phone inside school is not permitted, as it is a great impediment and distraction to the studies of the pupils. Hence, students should not bring the cell phones to the school, even if their parents prompt them to do so. Parents are also requested to be careful and vigilant in this regard and they should discourage their children from this habit.

Further, if any student found in the possession of cell phone, **the same will be confiscated and will not be returned.** This will be followed very strictly. Anyhow, it is planned to provide contact numbers to the parents to contact the school **incase of any emergency.**

8. **Students scaling boundary walls will be expelled immediately.**

It has been brought to our notice that some pupils scale the boundary walls and go out of the school even during the school hours, function etc. despite our repeated advice and instructions. This is a very habit and also very dangerous to the safety of the students.

Hence, if any student seen/caught scaling/jumping boundary walls, **strict disciplinary action including explusion** will be initiated against him. We have even requested the neighbours to inform the school authorities if they spot any student climbing the wall.

9. **Damaging the school property is a serious issue ; severe punishment will be awarded including expulsion.**

Infrastructural facilities are provided to the students at dearer costs.

- ¤ Tidy Classrooms
- ¤ Provision of Furniture
- ¤ Provision of Drinking Water
- ¤ Clean and Hygienic Toilets
- ¤ Laboratory Facilities etc.

Apart from providing these basic amenities, with heavy and recurring expenditure, we are maintaining these facilities with regular monitoring. Hence, we appeal to the parents to advise their children to use these facilities in a beneficial manner.

Serious punishment will be awarded to the students who cause damage to the school property in any form such as scribbling on the walls, breaking the school furniture and other materials.

A new website has been launched for our school. The students are requested to visit the website and get benefitted through this new forum. They can get all the details about the school. News related to our school will be posted in the site. The present students may inform about the website to the old students of our school.

The address of the website is : www.mctmhss.com

Thanking you,
yours sincerely,

| | | |
|---|---|---|
| (Shri. K.DHARMARAJ) | (Shri. M.GOVINDASAMY) | (Shri. TARUN GHAI) |
| Headmaster | PTA President | Correspondent |

SIR M. CT. MUTHIAH CHETTIAR HIGHER SECONDARY SCHOOL
23, Raja Annamalai Road, Purasawalkam, Chennai-600 084. Tel: 26411625, Fax: 26433845 Email: mctmitpark@vsnl.net

## சுற்றறிக்கை - பெற்றோர்களுக்கு

அன்பார்ந்த பெற்றோர்களே!

வணக்கம், "முக்கியமான கருத்துக்களை மற்றும் மாறுதல்களை" பள்ளியின் ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாடான, சீரான நடைமுறைக்கும், உடனடியாக அமலாக்கப்படவுள்ள, எடுக்கப்பட்ட பின்வரும் நடைமுறைகளை தங்கள் கனிவான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

நீங்கள் இக்கருத்துகளை ஏற்றுக் கொண்டும் மற்றும் இம் மாற்றங்களை கடைப்பிடிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இந்த நடைமுறைகளை தவிர்த்தல் மற்றும் பின்பற்றப்படாமலிருத்தல் தங்கள் மகன்/மகள் மீது உடனடி மாற்றங்களை ஏற்படுத்தும் கடும் நடவடிக்கைகளை எடுக்க அது தூண்டுதலாக இருக்கும்.

### 1. பள்ளிச் சீருடை :

வரும் கல்வியாண்டில் (2011-2012) பள்ளிச் சீருடை மாற்றப்பட்டுள்ளது. வரும் கல்வியாண்டின் முதல் நாள் முதல், புதிய பள்ளிச்சீருடையில் தான் மாணவர்கள் வரவேண்டும். புதிய பள்ளிச் சீருடையின் மாதிரிகள் மாணவர்களிடம் அவர்கள் முழு ஆண்டுத் தேர்வு எழுதும் போதே வழங்கப்படும். பெற்றோர்கள் இதற்கு முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் மாணவர்கள் பள்ளி திறக்கும் நாளன்றே புதிய சீருடையில் வருவதற்கு உதவுமாறும் கேட்டுக் கொள்கிறோம். புதிய சீருடை புரசைவாக்கம் மதர் ஷா & சன்ஸி-ல் கிடைக்கும். (மே மாதம் முதல் வாரத்தில்)

சீருடை குறியீடு : **சட்டை : D39490 பேண்ட் : STC23**

### 2. ஒழுக்கம் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் :

பள்ளி வகுப்பறையிலும், பள்ளி வளாகத்திலும், பள்ளிக்கு (பேருந்தில்) வரும்பொழுதும் ஒழுக்கம் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். பள்ளி தொடங்குவதற்கு முன்பாக பள்ளிக்கு வந்துவிட வேண்டும். குறைந்தபட்சம் காலை 8.15க்கு பள்ளிக்கு வந்துவிட வேண்டும். தங்களது குழந்தைகளை முன் கூட்டியே பள்ளிக்கு அனுப்புவது பெற்றோரின் தலையாய கடமையாகும்.

வேறெங்கும் சுற்றாமல் நேரடியாக பள்ளிக்குச் செல்ல வேண்டும். அதே போல் பள்ளி முடிந்தவுடன் நேரடியாக வீட்டிற்கு வந்து விட வேண்டும், என்று பெற்றோர்களும் தங்களது குழந்தைகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

**3.** சரியான காரணமின்றி மாணவர்கள் இடையில் வீட்டிற்கு அனுப்பப் படமாட்டார்கள். முழு வேலை நாளும் மாணவர்கள் பள்ளியிலேயே இருக்கவேண்டும். ஏதேனும் முக்கிய காரணமாக மாணவர்கள் இடையில் வீட்டிற்கு அழைக்கப்பட வேண்டுமென்றால் பெற்றோர்களே நேரில் வந்து தலைமை ஆசிரியரிடம் எழுதிக் கொடுத்துவிட்டு தங்கள் குழந்தையை அழைத்துச் செல்லலாம்.

பள்ளி வளாகத்தை விட்டு பள்ளி வேலை நாளில் வெளியில் சுற்றும் மாணவர்கள் மாற்றுச் சான்றிதழ் கொடுத்து (டி.சி) பள்ளியை விட்டு அனுப்பப்படுவார்கள்.

**4.** தேர்வு முடிந்தவுடன் பெற்றோர்களின் கவனம் குழந்தைகளிடம் இருக்க வேண்டும். அரசு விதிகளின் படியும் அதற்கு மேலேயும் காலாண்டு, அரையாண்டு, முதல், இரண்டு, மூன்று என்று மூன்று திருப்புதல் தேர்வுகளும் நடத்தப்பட்டு உடனே திருத்தப்பட்ட விடைத்தாள்களும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. பெற்றோர்கள் தேர்வு முடிந்தவுடன் தங்களது குழந்தைகளின் விடைத்தாள்களை கண்டிப்பாக வாங்கிப்பார்க்க வேண்டும். மாணவனின் வகுப்பாசிரியரையும் பார்க்கவேண்டும்.

தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தை கூட்டும்போது அதை தெரிந்துக் வைத்துக்கொண்டு கண்டிப்பாக கூட்டத்திற்கு வந்து தங்களது கருத்துக்களைக் கூறலாம்.

### 5. பள்ளிச் சீருடை ஒழுக்கம் :

பள்ளிச் சீருடையிலேயே மாணவர்கள் பள்ளிக்குவர வேண்டும்.

பிறந்த நாளாக இருந்தாலும் பள்ளிச் சீருடையே அணிந்து வரவேண்டும்.

சரியான பள்ளிச் சீருடை அணிந்து வராத மாணவர்கள் கண்டிப்பாக வெளியேற்றப்படுவார்கள்.

முடியை சரியாக அவ்வப்போது வெட்டிக்கொள்ளவேண்டும்.

நகங்கள் சுத்தமாக இருக்கவேண்டும். நகங்களை அடிக்கடி வெட்டி சரிசெய்து கொள்ளவேண்டும்.

சுத்தமான காலணிகளை அணிந்து வரவேண்டும்.

**6. புகையிலை அற்ற பள்ளி வளாகம் :**

புகையிலை தொடர்புள்ள எந்தவொரு பொருளையும் மாணவர்கள் பள்ளியிலோ வெளியிலோ பயன்படுத்தக் கூடாது. புகையிலையின் தீங்கினை பெற்றோர்களும் தங்களது குழந்தைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். புகையிலைப்பொருள்களை பயன்படுத்தும் மாணவர்கள் கண்டிப்பாக பள்ளியை விட்டு T.C. யுடன் வெளியேற்றப்படுவார்கள்.

**7. கைபேசி (செல்) :**

கைபேசி (செல்) முற்றிலும் பள்ளி வளாகத்தில் தவிர்க்கப்படவேண்டும். மாணவர்கள் கைபேசி வைத்திருந்தால் அது ஆசிரியர்களாலோ தலைமை ஆசிரியராலோ உடனே பறிமுதல் செய்யப்படும். கைபேசி கண்டிப்பாக திருப்பித் தரப்படமாட்டாது.

**8. மதில்சுவர் தாண்டுதல் :**

ஒரு சில மாணவர்கள் பள்ளி முடியும் முன்பே பள்ளி மதில் சுவர் மேல் ஏறிக்குதித்து எளிதாக வீட்டிற்குச் சென்றுவிடுகிறார்கள். இவ்வாறு மதில் சுவர் ஏறிக்குதிக்கும் மாணவர்கள் இதுவரை பள்ளியை விட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த முறை தொடர்ந்து பின்பற்றப்படும்.

**9. பள்ளிச் சொத்துக்களை உடைத்தல், அழித்தல் :**

சுத்தமான வகுப்பறை

தேவையான மின்விசிறிகள்

தேவையான டெஸ்க்குகள்

சுத்தமான குடிநீர்

சுத்தமான கழிவறை

நவீனமான அறிவியல் ஆய்வுக் கூடம்

விளையாட்டு உபகரணங்கள் இவையாவும் பள்ளியில் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் ஒரு சில மாணவர்கள் டெஸ்க்குகளை உடைத்தல், மின்விசிறிகளை வளைத்தல், மேசைகளை உடைத்தல், குழல் விளக்குகளை (டியூப் லைட்) உடைத்தல் போன்ற ஒழுங்கீன செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

பள்ளியின் சொத்துக்களை, சேதப்படுத்தும் மாணவர்கள் பள்ளியைவிட்டு வெளியேற்றப்படுவதோடு, அவர்கள் சேதப்படுத்திய பொருளுக்குரிய பணமும் கண்டிப்பாக மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

பெற்றோர்களின் முழு ஒத்துழைப்பு பள்ளிக்குத் தேவை :

கற்பித்தல் பணியைச் சரியாக செய்வதற்கு பெற்றோர்களின் முழு ஒத்துழைப்பும் பள்ளிக்குத் தேவைப்படுகின்றது. பள்ளிக்கு அனுப்பியதோடு தங்களது கடமை முடிந்தது என்றில்லாமல், பெற்றோர்களும் பள்ளியுடன் சேர்ந்து தங்களது குழந்தைகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு பாடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

A new website has been launched for our school. The students are requested to visit the website and get benefitted through this new forum. They can get all the details about the school. News related to our school will be posted in the site. The present students may inform about the website to the old students of our school.

The address of the website is : **www.mctmhss.com**

நன்றி.
தங்கள் அன்பார்ந்த

K. Dharmaraj | M. Govindasamy | Tarun Ghai

**(Shri. K.DHARMARAJ)**
Headmaster

**(Shri. M.GOVINDASAMY)**
PTA President

**(Shri. TARUN GHAI)**
Correspondent